டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.11.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 124 - Madurai | Online Edition

# நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசு முன்னுரிமை

## மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தகவல்

புது தில்லி, நவ.18

ஆசிய விதை மாநாடு 2025-ஐ மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் மும்பையில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். அப்போது ஆசிய விதை மாநாடு 2025-க்கான இலட்சினையும் வெளியிடப்பட்டது. தரமான விதைகள் மூலம் செழுமைக்கான விதைகளை விதைத்தல் என்பது இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருளாகும்.

இந்நிகழ்ச்சியில் தொடக்க உரையாற்றிய மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல், மக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்குதல், விவசாயிகளுக்கு வேளாண் பணி லாபகரமாக இருப்பதை உறுதி செய்தல் ஆகியவை அரசின் முக்கிய நோக்கங்களாகும் என்று குறிப்பிட்டார்.

ஒரு ஹெக்டேரில் விளைச்சலை அதிகரித்தல், விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்குதல், உற்பத்தி செலவுகளை குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விதைகளை உறுதி செய்தல், தேவையின் போது நிவாரணத் தொகை அளித்தல், வேளாண் பணிகளில் பல்வகைப் படுத்துதலில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் சிவ்ராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

# தோட்டக்கலை வெற்றி நிச்சியம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் ஆய்வு



கன்னியாகுமரி, நவ.18

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து காளான் பயிற்சியை கடந்த 13.11.25 முதல் நடத்தி வருகிறது. இப் பயிற்சியை ஆய்வு செய்ய S.P.லெட்சுமிகாந்தன், கன்னியா குமரி மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவன உதவி இயக்குநர், பேச்சிப் பாறை தோட்டக்கலை நிறுவனத்திற்கு வருகை தந்தார். முனைவர் அ.ஜெயா ஜாஸ்மின், பேராசிரியர் மற்றும் தலைவர், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்று வரும் வெற்றி நிச்சியம் திறன் மேம்பாட்டு பயிற்சியின் செயல்பாடுகள், முக்கிய நிகழ்வுகள் குறித்து முனைவர் தி.ராஜ்பிரவின், இணைப்பேராசிரியர் விளக்கி கூறினார். பின்னர் பயிற்சி மாணவர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வாயிலாக காளான் பயிற்சி குறித்த தங்களின் கருத்துகளை பதிவு செய்தனர். முனைவர் சுதா ராஜ் குமார், பயிற்றுநர் மற்றும் தேன் சாகுபடியில் மதிப்பு கூட்டும் மற்றும் விற்பனை முயற்சிகள் குறித்து முன்னோடி தேன் தொழில் முனைவர் காலப் ஆகியோர் விளக்கினர்.

இறுதியாக பயிற்சி மாணவர் சுபினா நன்றி தெரிவித்தார். மேலும் கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காளான் உற்பத்தி கூடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனர் செயலர் P.S.பிரதீப் குமார் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஷர்மி ஆகியோர் கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவன செயல்பாடுகளை விளக்கி கூறினார். புதிதாக அமைக் கப்பட்டுள்ள கோ கோ கன்றுகள் விற்பனை மையத்தையும் பார்வையிட்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பிரதம மந்திரியின் கவுரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன் பெற தனித்துவ அடையாள எண் கட்டாயம் பெற வேண்டும்



புதுக்கோட்டை, நவ,18

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார விவசாயிகள் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கவுரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன் பெற தனித்துவ அடையாள எண் கட்டாயம் பெற வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நி ஷா பேகம் தெரிவித்துள்ளார்.

அனைத்து விவசாயிகளும் அரசின் பல்வேறு திட்டப் பலன்களை பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமத்தினை தவிர்க்கும் வகையில அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன் பெற ஏதுவாக அனைத்து விவரங்களையும் மின்னனு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது விவசாயிகளின் பதிவு விவரங்களுடன் ஆதார் எண், கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களையும் விடுப்பாடின்றி இணைக்கும் பணி சம்மந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் சிறப்பு முகாம் மூலம் நடைபெற்று வருகிறது.

எனவே பொன்னமராவதி வட்டார விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர் களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்களது ஆதார் எண், கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி இத்திட்டத்தில் பதிவு செய்து பயன் பெறலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சிறுகமணி கேவிகேயில் இன்று பாரத பிரதமரின் கிசான் சம்மன் நிதி வழங்கும் நிகழ்வு மற்றும் இயற்கை வேளாண் மாநாடு நேரடி ஒளிபரப்பு

திருச்சி, நவ.18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பாரத பிரதமர் 21வது தவணையாக பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி இன்று காலை 12.00 மணி அளவில் கோயமுத்தூரில் இயற்கை வேளாண் மாநாட்டில் இருந்து விடுவிக் கிறார். இந்நிகழ்ச்சியை கண்டு பயன் பெறும் வகையில் திருச்சி மாவட்டத்திலிருந்து சுமார் 50 விவசாயிகளை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் அழைத்து செல்ல ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வில் நேரடியாக கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு ஒரு வாய்ப்பாக சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் மூலம் புதன் கிழமை (19.11.25) 11 மணி முதல் நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் வெளியிட்ட நவீன ரகங்கள், தொழில் நுட்பங்கள் மத்திய மாநில அரசின் திட்டங்கள், பயிறு வகை பயிர்கள் எண்ணெய் வித்து பயிர்களில் மகசூலை அதிகரிக்கும் திட்டங்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல், பயறு வகை வேளாண் பயிர்களில் மகசூல் அதிகரிக்கும் பயிர் பூஸ்டர்கள் பற்றிய உத்திகள், தென்னையில் குறும்பை உதிர்வை கட்டுப்படுத்த உதவும் தென்னை டானிக் உபயோகப்படுத்தும் முறைகள், மண்புழு உரம் தயாரித்தல், வேளாண் மற்றும் தோட்டக்கலை பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்ற தலைப்புகளில் விவசாயிகளின் சந்தேகங் களுக்கு. விளக்கம் அளிக்கப்பட இருக்கிறது. எனவே விவசாய பெருமக்கள் காலை 10.30 மணி முதல் வருகை புரிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 99424 49786, 86103 69983 90805 40412 & 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். கலந்து கொள்பவர் களுக்கு மரக்கன்று ஒன்று நினைவு பரிசாக வழங்கப்படும்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இந்திய மண்ணியல் சங்கத்தின் (ISSS) 89வது ஆண்டு மாநாடு

கோயம்புத்தூர், நவ.18

இந்திய மண்ணியல் சங்கத்தின் (ISSS) 89வது ஆண்டு மாநாடு 18.11.25 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. நாடு முழுவதும் உள்ள புகழ்பெற்ற மண்ணியல் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வை, இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), தமிழ்நாடுவேளாண் பல்கலைக் கழகத்தின் கோயம்புத்தூர் பிரிவு, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் இந்திய மண்ணியல் சங்கம், புதுதில்லி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.




முனைவர் ப.பாலசுப்ரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், ஆராய்ச்சி பிரமுகர்கள் மற்றும் பிரதிநிதிகளை வரவேற்றார். முனைவர் பிபி.மகேந்திரன், முதல்வர், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, இந்திய மண்ணியல் சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் வருடாந்திர மாநாடு குறித்து விளக்கினார். முனைவர் எம்.ரவீந்திரன், ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், மாநாடு குறித்து சுருக்கமான கருத்துக்களை வழங்கினார். முனைவர் ர.தமிழ் வேந்தன், துணைவேந்தர் (பொ), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம், கோயம்புத்தூர், சிறப்புரையாற்றினார். இந்தியாவில் மண்ணியலை முன்னேற்றுவதில் இந்திய மண்ணியல் சங்கத்தின் பாரம்பரியம் மற்றும் பங்களிப்புகளைப் பாராட்டினார். அதைத் தொடர்ந்து முனைவர் ரஞ்சன் பட்டாச்சார்யா, செயலாளர் இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), புதுதில்லி விருதுகளை வழங்கினார்.

முனைவர் சுரேஷ்குமார் சௌத்ரி, இயக்குநர் ஜெனரல் (இந்திய உர சங்கம்), புதுதில்லி தனது சிறப்புரையில், பல துறை ஆராய்ச்சி மற்றும் மண்மேலாண்மை உத்திகளின் முக்கியத்துவத்தை அடிக் கோடிட்டுக் காட்டினார்.

தொடக்க நிகழ்ச்சியின் போது 89வது ஆண்டு மாநாட்டின் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் புத்தகங்கள் உட்பட ஐந்து வெளியீடுகளும் வெளியிடப்பட்டன. தொடக்க விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற மண்ணியல் விஞ்ஞானிகள் மற்றும் இந்த நிகழ்வின் நிதி உதவி ஆதரவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.




இந்த மாநாட்டை வி.தட்சிணாமூர்த்தி, இந்திய ஆட்சிப் பணி, தமிழ்நாடு அரசின் வேளாண் உற்பத்தி ஆணையர் & அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, ஆன் லைன் மூலம் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் தொடங்கப் பட்ட தமிழ் மண்வளம் (மண் ஆரோக்கியம்) மற்றும் முதலமைச்சரின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்' ஆகியவற்றின் முக்கிய முயற்சியை அவர் எடுத்துரைத்தார். மண் வளம் மற்றும் விவசாய உற்பத்தித் திறனை நிலை நிறுத்துவதற்கு துல்லிய வேளாண்மை மற்றும் மண்வள அட்டைகளின் முக்கியத்து வத்தையும் அவர் வலியுறுத்தினார். முனைவர் ஹிமான்ஷுபதக், தலைவர் இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), புதுதில்லி & இயக்குநர் ஜெனரல் (இக்ரிசாட்) ஹைதராபாத், தனது தலைமை உரையில் மண்ணியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தை ஊக்குவிப்பதில் பல சகாப்தங்களாக சங்கத்தின் பங்களிப்புகளை கோடிட்டுக் காட்டினார். மண்வளம் குறைதல், நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள் மற்றும் காலநிலை மீள் தன்மை போன்ற சம கால சவால்களை நிவர்த்தி செய்வதில், சங்கத்தின் உறுதிப்பாட்டையும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். மண்ணியல் துறையில் தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் சாதனைகள், நிலையான மண் மேலாண்மை நடைமுறைகளின் அவசியம் மற்றும் மண் வளம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்வது குறித்தும் அவர் எடுத்துரைத்தார். முனைவர் து.செல்வி, தலைவர், இந்திய மண்ணி யல் சங்கம் (ISSS), கோயம்புத்தூர் பிரிவு மற்றும் அமைப்புச் செயலாளர் & பேராசிரியர்மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் நன்றி தெரிவித்ததன் மூலம் தொடக்க அமர்வு நிறைவடைந்தது. மூன்று நாள் மாநாட்டில், மண் வளம், ஊட்டச் சத்து மேலாண்மை மற்றும் துல்லியமான விவசாயத் திற்கான டிஜிட்டல் கருவிகள் தொடர்பான பல்வேறு கருப்பொருள் களை உள்ளடக்கிய தொழில்நுட்ப அமர்வுகள், குழு விவாதங்கள், சுவ ரொட்டி விளக்கக்காட்சிகள் மற்றும் விவசாயிகள் – விஞ்ஞானி தொடர்புகள் இடம் பெறும். விலை மதிப்பற்ற மண் வளங்களின் நிலையான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக மண்ணியல் விஞ்ஞானிகள் மற்றும் பங்குதாரர்களிடையே அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் இந்திய மண்ணியல் சங்கத்தின் 89வது ஆண்டு மாநாடு ஒரு முக்கியமான தளமாக செயல்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் உட்பட சுமார் 500 பங்கேற்பாளர்கள் பயனடைவர்.

# வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கூட்டாய்வு




விருதுநகர், நவ.18

விருதுநகர் மாவட்டம், வத்திரா யிருப்பு வட்டாரம், கான்சாபுரம் மற்றும் வத்திராயிருப்பு கிராமத்தில் நெற்பயிர் சாகுபடியில் குலை நோய், இலை சுருட்டுப்புழு மற்றும் மக்காச்சோளப் பயிர்களில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதல் தென்பட்டதால் விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2025-26ன் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கூட்டாய்வு என்ற இனத்தின் கீழ் விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) சுமதி, வேளாண்மை துணை இயக்குநர்/மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அம்சவேணி மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.செல்வராணி, தலைமையில் முனைவர் விமலா, நோயியியல் துறை பேராசிரியர், திருவில்லி புத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையம், மற்றும் வத்திராயிருப்பு துணை வேளாண்மை அலுவலர் ப.பாலகிருஷ்ணன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் முனியப்பன் மற்றும் ஜீவா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி மஞ்சுளா, உதவி தொழில் நுட்ப மேலாளர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். நெற்பயிரில் தற்பொழுது மேகமூட்டமான வானம் மற்றும் அடிக்கடி மழை பெய்துவரும் சூழலில் குலை நோய் தாக்குதல் அதிகமாக காணப்படும்.

தாக்குதலில் அறிகுறிகள் இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மையப்பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்றிணைந்து ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். அதனை கட்டுப்படுத்திட நோயற்ற பயிர்களில் இருந்து விதைகளை தேர்வு செய்து விதைக்க வேண்டும், ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் டிரைசைக்லோசோல் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை நீக்க வேண்டும், நோய் எதிர்ப்பு திறன் கொண்ட இரங்களை பயன்படுத்த வேண்டும். நோய் தாக்குதல் தென்பட்டால் ஏக்கருக்கு டிரைசைக்லோசோல் 200 கிராம் தெளிப்பதன் முலம் கட்டுப்படுத்தலாம்.

மேலும் நெற்பயிர்களில் இலை சுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப் படுத்த அதிக அளவு தழை சத்து இடுவதை தவிர்க்க வேண்டும்.

டிரைகோகிரம்மா கிலோனிஸ் முட்டை ஒட்டுண்ணிகளை பயிர் நடவு செய்த 35, 45 மற்றும் 55வது நாட்களில் ஏக்கருக்கு 2சிசி அளவில் மூன்று முறை விட வேண்டும். பூச்சி தாக்குதல் பொருளாதர சேத நிலை அளவு கடந்து தென்பட்டால் ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 எஸபி 400 கிராம் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

நெற்பயிர்களில் சாறு உறிஞுசும் பூச்சியான செம்பேன், நெற்பயிரின் இலைகளின் அடிப்புறத்திலிருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகளின் மேற்பரப்பில் பழுப்பு மஞ்சள் மற்றும் வெள்ளி நிறத்தில் புள்ளிகளும் மெல்லிய வரிகளும் ஏற்பட்டு நாளடைவில் இலைகள் வெளிறி கருகிவிடும். நாற்றங்காலிலும் நடவு வயலிலும் இதன் பாதிப்பால் 25 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வயற்பரப்பில் அதிகமான ஈரப்பதமும் வெப்பமும் மற்றும் களைகள் அதிகமாகவும் இருப்பது செம் பேன்கள் அதிகமாக இனப்பெருக்கம் செய்து பரவுகிறது. நெல்லில் செம்பேன்களை கட்டுப்படுத்த ஸ்பைரோமெசிபன் 240 எஸ்ஸி 1.2 மிலி ஒரு லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளித்து கட்டுப் படுத்தலாம்.

மக்காச்சோளப் பயிர்களில் படைப்புழுவானது ஆறு புழு நிலைகளை கொண்டது. இளம் புழுப் பருவம் கருப்பு தலையுடன் பச்சை நிறத்தில் காணப்படும். ஆறாம் நிலையிலுள்ள புழுவின் தலைப்பகுதியில் வெண்ணிறக்கோடுகளும் புழுவின் இறுதிப் பகுதியில் நான்கு வெண்ணிற புள்ளிகளும் தென்படும். இந்த அறிகுறிகளை கொண்டு விவசாயிகள் இப்புழுவினை எளிதில் கண்டறியலாம். புழுக்கள் வெயில் அதிகமாக இருக்கும்போது இலையின் அடிப்குதியில் சென்று மறைந்துகொண்டு பாதிப்பை உண்டாக்கும். தாய் அந்துபூச்சி 100 முதல் 200 முட்டை வரை குவியலாக இலையின் அடிப்பகுதியில் இடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலையின் அடிப்பகுதியை சுரண்டி சேதா ரத்தை உண்டாக்கும். இளம் புழுக்கள் நூலிழைகளை உருவாக்கி அதன் மூலம் காற்றின் திசையில் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு செல்லும் இளம் செடிகளில் இளம் உறைகளையும் முதிர்ந்த செடியில் கதிரின் நூலிழைகளையும் அதிகம் சேதப் படுத்தும். இரவு நேரங்களில் அதிகமாக சேதத்ததை விளைவிக்கும். கோடை உழவு செய்தல், கடைசி உழவின் போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு அடியுரமாகவும், வரப்பு பயிராக பொறிப் பயிர் பயிர் செய்தும் பொருளாதர சேத நிலை அளவு கடந்து தென் பட்டால் மக்காச்சோளப் பயிர்களில் படைப்புழுவினைக் கட்டுப்படுத்த குளோரன்டரனோபுரோல் 18.5% இஇசி 0.4 மி.லி/ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வீட்டு தோட்டத்தில் மாவுப் பூச்சிகளை இயற்கை முறையில் கட்டுபடுத்துவது எப்படி?



வீட்டு தோட்டங்களில் பயிரிட்டுள்ள காய்கறி செடிகளான கத்திரி, மிளகாய், அவரை போன்ற காய்கறி களிலும், செம்பருத்தி, ரோஜா போன்ற மலர் செடிகளிலும் மாவு பூச்சி தாக்குதல் பரவலாக உள்ளதை நாம் பார்க்கிறோம். அதை எவ்வாறு எளிய முறையில் இயற்கையாகவே இரசாயன மருந்து இல்லாமல் கட்டுபடுத்துவது குறித்து பார்ப்போம்.

**மாவு பூச்சி (MEALY BUG)**

இது ஒரு வெளிநாட்டு வரவின பூச்சியாகும். ஒரு காலத்தில் (MINOR PEST) யாக இருந்த மாவு பூச்சி (வெள்ளை பூச்சி) காலநிலை மாற்றத்திற்கேற்ப இன்று மேஜர் பூச்சியாக (MAJOR PEST) மாறி எல்லாவிதமான தட்பவெப்ப காலங்களில் (ஈரமான, வறண்ட, வெப்ப நிலை) தாக்குதல் அதிகமாக உள்ளது. ஒரு பூச்சி வருடத்திற்கு 300-400 முட்டைகள் இடும். இவை மீது வெள்ளை மெழுகு கோட் தடவி இருக்கும். இவற்றை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இழுத்து கொண்டு செல்ல கூடியது எறும்புகள் தான். மாவு பூச்சியின் கழிவுகளை உண்ணுவதற்காகவே எறும்புகள் கூட்டமாக கூட்டமாக செடியை சுற்றி காணப்படும். இவை இலை தண்டு போன்ற பகுதிகளில் ஓட்டிக்கொண்டு அவற்றின் சாற்றை ஊறிஞ்சி விடுவதால் செடிகள் வாடி வளர்ச்சி குன்றி, காய்ந்து கருகி வாடி மடிந்து விடும். அதுமட்டுமல்ல செடிகளில் கருப்பு பூசணம் ஏற்படும் (BLACK SOOTY MOLUD).

**கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும்?**

வீட்டில் நாம் தினமும் வடிக்கின்ற சாத வடிநீரில் கொஞ்சம் சோற்று பருக்கைகளை போட்டு கலக்கி நன்றாக 3 நாட்கள் மூடி வைக்க வேண்டும். 3 நாள் கழித்து திறந்து பார்க்கும் போது ஒரு வித காடி புளிப்பு நொடி (வாடை) உண்டாகும். அப்போது அந்த புளிப்பு நீரை நன்றாக கலக்கி அதனுடன் 3 சொட்டு பாத்திரம் கழுவ பயன்படுத்தும் சோப்பு வாட்டர் அல்லது துணி துவைக்க

பயன்படுத்தப்படும் சோப்பு லிக்யூட் (SOAP LIQUID) சேர்த்து மாவு பூச்சிகளின் மீது ஸ்பிரேயர் கொண்டு நன்றாக நனையும் படி தெளிக்க வேண்டும். இதனால் மாவுபூச்சியின் மேல் உள்ள மெழுகு பூச்சி கழன்று விடும். சிவப்பு நிறத்தில் காணப்பட்டு அவை மடிந்து விடும். இந்த கலவை இரு வாரங்களுக்கு ஒரு முறை சிறிய அளவிலான வீட்டு தோட்ட பயிர்களுக்கு தெளிக்கலாம். மாவுபூச்சியின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த எறும்புகளை கட்டுப்படுத்த வேண்டும். எறும்பு பொடி, வசம்புதூள் போன்றவற்றை செடியை சுற்றி தூவி விடலாம்.

இந்த எளிய முறையில் இயற்கையான பாதுகாப்பு கொடுப் பதுடன் மாவு பூச்சியை எளிதாக கட்டுப்படுத்தலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உர விற்பனையாளர்கள் கருத்தரங்கம்



தஞ்சாவூர், நவ.18

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மொத்த மற்றும் சில்லறை உர விற்பனையாளர் கருத்தரங்கில் இப்கோ பங்கேற்றது. மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலிருந்தும் 400-க்கும் மேற்பட்ட உர விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கிற்கு வேளாண்மை இணை இயக்குநர் வித்யா, உதவி வேளாண் இயக்குநர் (தர கட்டுப்பாடு) செல்வராஜ் மற்றும் மாவட்ட ஆட்சியரின் வேளாண்மை உதவியாளர் ஜெயசீலன் ஆகியோர் தலைமை வகித்தனர். இந்நிகழ்வில், இப்கோ கள அதிகாரி சரவணன், நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க் மற்றும் நானோ காப்பர் திரவ உரங்களின் முக்கியத்துவம், பயன்கள், பயிர்களுக்கு ஏற்ப பயன்பாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அளவுகள் குறித்து விரிவாக விளக்கினார். மேலும்,நானோ உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சங்கட ஹரன் பீமா யோஜனா விபத்து காப்பீட்டு திட்டம் பற்றியும் விவரித்தார்.

# கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற தரமான விதை அவசியம்



கடலூர், நவ.18

கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற, அந்தந்தப் பகுதி களுக்கு ஏற்ற குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் இரகங்களை தேர்வு செய்து அந்த ரகங்களின் தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா தெரிவித்துள்ளார்.

கார்த்திகை பட்டம் என்பது கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் (நவம்பர் – டிசம்பர்) விதைப்பு செய்யப்படுவதாகும். கார்த்திகை மாதத்திற்குள் நிலக்கடலையை விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது, போதிய மழை, சரியான தட்பவெப்ப நிலை சாதகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கார்த்திகை மற்றும் மார்கழி பட்டத்தில் அதிகளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. CO-7, VRI-9, VRI-10, GG 34, GJG 9 போன்ற இரகங்கள் பயிரிடப்படுகிறது. நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலைப் பெற, அந்த ரகங்களின் தரமான விதைகளை பயன்படுத்துவது முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். முளைக்கட்டி விதைத்தல் முறையை கடைபிடித்து முளைக் கட்டிய விதைகள் மற்றும் இறந்த விதைகளை தனியே பிரித்து எடுத்துவிட வேண்டும்.

இவ்வாறு நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். பயிரிடும் விதை தரமானதாக இருப்பது அவசியம் என்பதால் விதையின் தரத்தை பரிசோதிக்க அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசு விதை பரிசோதனை நிலையங்களில் விதைகளை கொடுத்து அதன் தரத்தை அறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத் தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படு கின்றன.

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும் குறைந்தபட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். கடலூர் மாவட்டத்தில் எண்.97, பிருந்தாவன் நகர், பெண்ணை

கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணா மலை செட்டிசாவடி, கடலூர் - 607 006 என்ற முகவரியில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் 500 கிராம் அளவிற்கு நிலக்கடலை விதை மாதிரி எடுத்து பயிர், இரகம், நிலை மற்றும் குவியல் எண் ஆகியவை குறித்த விவரத்துடன் கொடுத்து அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரி சோதனைக் கட்டணமாக ரூ.80/- வசூலிக்கப்படும். நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதைதான். எனவே நல்ல தரமான விதையை தேர்வு செய்வது மிகவும் அவசியமாகும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அயோத்தியா பட்டணம் வட்டாரத்தில் கிராம அடிப்படை பயிற்சி




சேலம், நவ.18

சேலம் மாவட்டம், உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராம அடிப்படை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி அயோத்தியா பட்டணம் கிராமத்தில் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் நிறைமதி, உதவி செயற்பொறியாளர் சுரேஷ் குமார் ஆகியோர் உழவர் பயிற்சி நிலைய செயல்பாடுகள், வேளாண் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

தோட்டக்கலை உதவி அலுவலர் விஜயகுமார் கலந்து கொண்டு மாடித்தோட்டம் அமைத்தல், தென்னையில் ரூகோஸ் வெள்ளை பூச்சி தாக்குதல், காண்டாமிருக வண்டு தாக்குதல், சிவப்புக் கூன் வண்டு தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு குறித்தும், தோட்டக்கலை மானியங்கள் குறித்தும் விளக்கம் அளித்தனர்.

வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் கவிபாரதி ஒழுங்குமுறை விற்பனை கூடம் குறித்தும், விதைகள் இருப்பு வைத்தல், அறுவடைக்குப் பின் விதைகளை ஈரம் இல்லாமல் உலர்த்தவும், அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கம் அளித்தனர்.

வேளாண்மை துணை அலுவலர் பிரபாகரன், விவசாயிகள் அடையாள எண் பதிவு செய்தல் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் ஹேமஸ்ரீ பயிர் காப்பீடு செய்வதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கம் அளித்தனர். வேளாண்மை உதவி அலுவலர் சந்தியா, பயிர் அறுவடை பரிசோதனை அலுவலர் கலைமணி மற்றும் அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர்.

# மக்காச்சோள பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிற்சி



திண்டுக்கல், நவ.18

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் பலக்கனுத்து கிராமத்தில் மக்காச்சோள பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி ஆலோசனைபடி மகளிர் குழுக்களுக் கான விவசாயிகள் பயிற்சி மற்றும் மக்காச்சோள பயிர்களில் பயிர் மேலாண்மை தொழில்நுட்ப சாகுபடி முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறப்பட்டது. இப்பயிற்சியில் எம் எஸ் சுவாமி நாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன் மக்காச்சோள பயிர் பற்றி கூறி படைப்புழு தாக்குதல் சரி செய்ய மெட்டாரிசியம் ஸ்பிரே செய்ய கூறினார். மற்றும் குழுக்களின் பொறுப்பாளர்களின் பொறுப்பு நிதியினை பயன்படுத்தும் முறை பற்றியும் கூறினார். வேளாண்மை அலுவலர் முருகானந்தம், மகளிர் குழு உறுப்பினர்கள் நிலத்திற்கு தேவையான உரங் களை வேளாண் அலுவலகத்தில் மானிய விலைக்கு வாங்கி பயன் பெறலாம் என கூறினார். அப்பகுதி முன்னோடி விவசாயி இளங்கோவன் இந் நிகழ்வில், கலந்து கொண்டு மகளிர் குழு விவசாயிகளை ஒருங்கிணைத்து உதவினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



# உழவர் நல சேவை மையம் அமைக்க வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

ஈரோடு, நவ.18

ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார லேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், சென்னிமலை (பொ) தெரிவித்துள்ள செய்தியில் 2025-26 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் என்னும் திட்டம் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்பு முடித்த 20 வயது முதல் 45 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களின் பட்டறிவு தொழில்நுட்பத் திறனும் உழவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் ஈரோடு வட்டாரம் மற்றும் சென்னிமலை வட்டாரத்திற்கு 3 உழவர் நல சேவை மையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மையங்களின் மூலம் உழவர்களுக்கு தேவையான விதைகள், உரங்கள், பூச்சி நோய் மேலாண்மை, நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளை பொருட்கள் மதிப்பு கூட்டல் போன்ற வேளாண் தகவல்கள் வழங்கப்படும்.

உழவர் நல சேவை மையம் அமைக்க ரூபாய் 10 லட்சம் மதிப்பில் 2 மையங்கள் மற்றும் ரூபாய் 20 லட்சம் மதிப்பில் 1 மையங்கள் அமைக்க இலக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மையங்கள் அமைக்க 30 சதவீதம் மானியமாக ரூபாய் 3 இலட்சம் முதல் 6 இலட்சம் வரை தொகை வழங்கப்படும். வேளாண் உழவர் நலத் துறையின் மூலம் வழங்கப்படும் அனைத்து உரிமங்களும் முதலமைச்சரின் உழவர் நல சேவை மைய பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

விரிவான திட்ட அறிக்கை, கடன் பெறும் வழிமுறைகள், தேவையான ஆவணங்கள், போன்ற விபரங்களை பெற ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகவும்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஓர் வேண்டுகோள்!

சேலம், நவ.18

எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலையை கார்த்திகை, மார்கழி பட்டத்தில் பயிரிடுவது அதிக மகசூலை தருகிறது. நிலக்கடலையை அறுவடைக்குப்பின் சேமித்து வைத்து அதனை அடுத்த பருவத்தில் மீண்டும் விதையாக பயன்படுத்துவது விவசாயிகளிடையே நடைமுறையில் உள்ள வழக்கமாகும். இதனால் விதையிலுள்ள எண்ணெய் தன்மை அதிகமாகி அதன் முளைப்புத்திறன் பாதிக்கப்படுகிறது. எனவே நல்ல தரமான சான்று பெற்ற விதையை தேர்வு செய்வது மிகவும் அவசியம். நிலக்கடலை பயிரிடும் முன் முளைக்கட்டி விதைத்தல் என்ற எளிய முறையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். இதற்கு 140 கிராம் கால்சியம் குளோரைடை 28 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் விதையளவு 55 கிலோவை 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு ஊற வைத்த விதைகளை ஈர சாக்கின் மீது பரப்பி அதை மற்றொரு ஈர சாக்கை கொண்டு 24 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்பு முளை கண்ட விதைகளை பிரித்து நிழலில் உலர்த்த வேண்டும். இறந்த விதைகளை தனியே பிரித்து எடுத்து விட வேண்டும். இவ்வாறு நல்ல தரமான முளைப்புத் திறனுடைய விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன் படுத்துதல் நல்ல விளைச்சலை தரும்.

நிலக்கடலை பயிருக்கு முளைப்புத்திறன் 70 சதவிகிதமும், ஈரப்பதம் 9 சதவிகிதற்கு மிகாமல் இருக்க வேண்டும். விதையின் முளைப்புத்திறன், ஈரப்பதம் அறிய விரும்பும் சேலம் மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு விதைக் குவியலில் இருந்தும் 500 கிராமும் துணிப்பையில் எடுக்க வேண்டும். மேலும் ஈரப்பதம் அறிந்து கொள்ள விரும்பும் பட்சத்தில் 100 கிராம் விதையினை பாலிதீன் பையில் காற்று புகாவண்ணம் எடுத்து அதே துணிப்பையில் வைத்து விண்ணப்பக் கடிதத்துடன் இணைத்து அறை எண் 403, நான்காவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் 636 001 முகவரியில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் நேரில் கொண்டு வந்து கொடுத்தோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி பரிசோதனை முடிவுகளை அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரிக்கான பரிசோதனைக் கட்டண மாக ரூ.80/- செலுத்த வேண்டும் என சேலம், விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் பெ.கவிதா தெரிவித்துள்ளார்.

# நெல் சம்பா பயிருக்கு நவம்பர் 30ம் தேதி வரை பயிர் காப்பீடு செய்யலாம்

## வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

புதுக்கோட்டை, நவ.18

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2025-26 ம் ஆண்டு சம்பா நெல்(சிறப்பு) பருவ பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 30ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

சம்பா நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட தொடர் முயற்சியால் சம்பா நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 30.11.25 வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி 2025 (நவம்பர்) 30 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்ய விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு பயிர் காப்பீட்டுக் கட்டணமாக நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.540/- செலுத்தினால் போதுமானது. எனவே இதுவரை பயிர் காப்பீடு செய்யாத விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள் ஏற்கெனவே பதிவு செய்த விவசாயிகள் மீண்டும் பதிவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சம்பா பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்களிலோ (இ-சேவை மையங்கள்) காலக்கெடுவுக்குள் காப்பீடு செய்யலாம். விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது முன் மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு 1435 ஆம் பசலிக்கான அடங்கல், வங்கிக்கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும்

பொது சேவை மையங்களில் (இ–சேவை மையங்கள்), தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளில் பெற்று கொள்ளலாம்.

இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு பயிர் காப்பீடு இணையதள முகவரி (www.pmfby.gov.in) அல்லது அருகிலுள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளையோ, பொது சேவை மையங் களையோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் களையோ அணுகி பயன் பெறுமாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளர்.



# மக்காச்சோளப் பயிரைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் தேவை

சேலம், நவ.18

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், தலைவாசல் வட்டாரத்தில் அதிகப்படியாகப் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளப் பயிர்கள் வெள்ளப் பாதிப்பிலிருந்து பாது காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா வலியுறுத்தியுள்ளார்.

மக்காச்சோளப் பயிர் தண்ணீர் தேங்குவதற்கும், அதிக ஈரப்பதத்திற்கும் மிக உணர்திறன் கொண்டது என்பதால், விவசாயிகள் உடனடியாகக் கீழ்க்கண்ட மேலாண்மை முறைகளைப் பின்பற்றுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

**உபரி நீரை வெளியேற்றுதல்**

வயல்களில் தேங்கியுள்ள தண்ணீரை வடிகால் வாய்க்கால்கள் மூலம் விரைவாக வெளியேற்ற வேண்டும்.

**ஊட்டச்சத்து மேலாண்மை (இலைவழித் தெளிப்பு)**

வளர்ச்சிக் குறைபாடு, துத்தநாகம் மற்றும் இரும்புச் சத்துக் குறைபாடுகள் தென்பட்டால், 0.5% துத்தநாக சல்பேட் மற்றும் 1% இரும்பு சல்பேட் கரைசலை இலைகளில் தெளிக்கலாம். 2% டிஏபி (DAP) மற்றும் 1% பொட்டாசியம் குளோரைடு (KCl) கரைசல் இலைவழித் தெளிப்பு, பயிர் மீட்சியை ஊக்குவிக்கவும் உதவும்.

**மேலுரம் இடுதல்**

பூக்கும் மற்றும் பால் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு, மழை நீர் வடிந்த பிறகு, ஏக்கருக்கு 50 கிலோ அம்மோனியம் சல்பேட் (அல்லது) 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இட வேண்டும்.

விவசாயிகள் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றி தங்கள் பயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். மேலும் விவரங்களுக்கு, அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அல்லது தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

# துவரையில் பச்சை காய்த்துளைப்பான் அறிகுறிகள் கட்டுப்பாட்டு முறைகள்

- இளம் புழுக்கள் இலைகளை உண்ணும்.
- பெரிய புழுக்கள் காய்களை துளைத்து உண்ணும்.
- புழுக்கள் தலையை மட்டும் காயின் உள்ளே விட்டு, உடலை வெளிப்பக்கம் வைத்திருக்கும்.
- காயைச் சுற்றி வட்டவடிவ துளைகள் இருக்கும்.
- துவரையின் 9 வரிசைக்கு ஒரு வரிசை சூரியகாந்தியையும், மக்காச்சோளத்தை நிலத்தை சுற்றியும் பயிரிட வேண்டும்.
- இனக்கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து பூச்சி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும்.
- ஏக்கருக்கு 20 பறவைத் தாங்கிகள் என்ற எண்ணிக்கையில் அமைக்கவும்.



● வளர்ந்த புழுக்களை சேகரித்து அழிக்கவும்.

● பச்சைக் காய்ப்புழு நச்சுயிரியை ஏக்கருக்கு 200 மிலி மற்றும் ஒட்டும் திரவம் 1.0 மிலி / லி. என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவும்.

**பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றினை ஏக்கருக்கு தெளிக்கலாம்.**

● பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் வார் குர்ஸ்டாக் 0.6 கிலோ

● பிவேரியா பாசியானா (1.15 % WP) 1 கிலோ

● அசாடிராக்டின் (0.03%) 400 மி.லி

● கார்டாப்ஹைட்ரோகுளோரைடு (50% SP) 400 கிராம்

● குளோரோடேரேனிலிபுருள் (18.5% SC) 60 மி.லி




● பிப்ரோனில் (80% WG) 20 கிராம்

● புளுபெண்டிமைட் (39.35% SC) 20 மி.லி

● புளுபெண்டிமைட் (20% WG) 50 கிராம்

● இமாமேக்ட்டின் பென்சோயேட் (5% SC) 80 மி.லி

● லுபனுரான் (5.4 % EC) 250 மி.லி

ஏதேனும் ஒன்றினை ஏக்கருக்கு தெளிக்கலாம் என சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டார வேளாண்மை உதலி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333